**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காங்கேயம்**

**முன்னிலை:– செல்வி.D. தேன்மொழி, பி.ஏ.,பி.எல்., எல்எல்.எம்.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர், காங்கேயம்

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ம் நாள் திங்கள்கிழமை

**பட்டியல் வழக்கு எண். 315/2023**

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
ஊதியூர் காவல் நிலையம்,
குற்ற எண். 125/2022

... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

A1. நாகதேவன்,
த/பெ. மாயன்.
A2. பாஸ்கரன்,
த/பெ. தங்கராஜ் ... எதிரிகள்

இவ்வழக்கானது கடந்த 21.12.2023 அன்று C.C. No: 315/2023 ஆக இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் எதிரிகள் தரப்பில் குற்றத்தை ஒப்புக்கொண்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் நிலை II திரு. செந்தில்குமார் ஆஜராகியும் எதிரிகள் தரப்பில் திரு.G.தமிழ்செல்வம் அவர்கள் ஆஜராகியும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரீசிலனை செய்து இருதரப்பு வாதங்களையும் கேட்டு இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

1. கடந்த 29.08.2022 ஆம் தேதியன்று மாலை சுமார் 17.35 மணிக்கு ஊதியூர் காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட நெழலி கிராமம் கருக்கம்பாளையம் பிரிவு உருமாண்டம்பாளையம் செல்லும் ரோட்டில்

வாகனத்தின் உரிமையாளரான 1 ஆம் எதிரி மற்றும் வாகனத்தின் ஓட்டுநரான 2 ஆம் எதிரி பாஸ்கரன் ஆகியோர் TN 39 CD 4115 என்ற எண்ணுள்ள டிப்பர் லாரியில் எவ்வித அரசு அனுமதியும் இன்றி, சட்டவிரோதமாக, அரசுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி சுயலாபம் அடைய வேண்டும் என்ற குற்றமுறு உள்நோக்கத்தோடு, ரூ. 873/– மதிப்புள்ள 5.40 கனமீட்டர் (1.88 யூனிட்) கிராவல் மண்ணை திருடிய குற்றத்திற்காக ஊதியூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் எதிரிகள் மீது சட்டப்பிரிவு 379 இ.த.ச ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. நீதிமன்றத்திலிருந்து எதிரிகளுக்கு இவ்வழக்கு சம்பந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பி எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் எதிரிகளுக்கு கு.வி,மு.ச பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிகள் மீது பிரிவு 379 of IPC ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு, குற்றச்சாட்டுகளை பற்றி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்தார். எனவே, இந்த வழக்கு அரசு தரப்பு சாட்சிகளுக்காக ஒத்திவைக்கப்பட்டது.

3. குற்றவாளிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி குற்றத்தை ஒப்புக்கொண்டு மனுவை தாக்கல் செய்தார். ஆகையால், இந்தியாவின் உச்சநீதிமன்றத்தின் ****மகாராஷ்டிரா மாநிலம் எதிராக சுக்தேவ் சிங் மற்றும் மற்றொருவர்** (1992) 3 SCC 700** என்ற வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில், குற்றவாளிகளின் ஒப்புதல் தெளிவாகவும், தகுதியற்றதாகவும் இருப்பதையும், உண்மைகளை ஒப்புக்கொள்வதால் குற்றங்கள் நிரூபிக்கப்படுவதையும் கருத்தில் கொண்டு, இந்த நீதிமன்றம் அந்த ஒப்புதலை ஏற்க முனைந்துள்ளது. இந்நீதிமன்றம் குற்றவாளிகளை இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 379 இதச ன் கீழ் குற்றவாளிகளாக அறிவிக்கிறது. குற்றவாளிகளிடம் தண்டனை குறித்து கேள்வி வினவியபோது, அவர் தான் முதல் குற்றவாளிகள் என்றும், நீதிமன்ற

வாய்தாவிற்கு தவறாமல் ஆஜராகியதாகவும், தான் நன்னடத்தையுடன் நடந்துகொண்டதாகவும் கூறி தண்டனையை குறைப்பதற்குத் தாழ்மையாக கேட்டுக்கொண்டார். முடிவில், **குற்றவாளிகளுக்கு இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 379ன் கீழ் தலா ரூ.5000/– அபராதம்** விதிக்கப்படுகிறது. அபராதம் செலுத்த தவறினால், குற்றவாளிகள் 1 வாரம் எளிய சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும். மேற்படி, குற்றவாளிகளுக்கு மொத்தமாக ரூ.10,000/– அபராதம் விதிக்கப்படுகிறது. இத்தீர்ப்பு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகிரப்பட்டது.

4. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்குச்சொத்தான (பி.ஆர்.143/2022) TN 39 CD 4115 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரி சி.ஆர்.பி.எண்.34/2022, நாள்.30.01.2023 ஆம் தேதியிட்ட மனு அனுமதிக்கப்பட்டு எதிரி இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றுள்ளார். இவ்வழக்கு முடிந்துவிட்டதால் வழக்குச்சொத்தினை உரிமையாளரே வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. மற்றொரு வழக்கு சொத்தான (பி.ஆர்.143/2022) சுமார் 3 யூனிட் மணல் வருவாய் துறையிடம் அரசுடைமையாக்க ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் நாளான இன்று திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/–D.தேன்மொழி,**

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

காங்கேயம்

**<u>குறிப்பு–</u>**

1. தீர்ப்பு விபரம் சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.
2. அபராதம் செலுத்தப்பட்டது.
3. தண்டனை முடிந்து எதிரிகள் நீதிமன்றத்திலிருந்து விடுவிக்கப்பட்டார்கள்.